பக்கங்கள்: 07

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 03 வள்ளுவர் ஆண்டு 2053 ஆடி 24 செவ்வாய்க்கிழமை 09.08.2022 கதிர் 166

## கொள்கை விளக்க உரை மீதான விவாதம் ஆரம்பம்

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கடந்த 3 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் முன்வைத்த கொள்கை விளக்கம் தொடர்பான சபை ஒத்தி வைப்பு விவாதம் இன்று ஆரம்பமாகியுள்ளது.

நாடாளுமன்றம் இன்று பிற்பகல் ஒரு மணிக்குச் சபாநாயகர் தலைமையில் கூடியது. அதை யடுத்து ஜனாதிபதியின் கொள்கை விளக்க உரை மீது விவாதம் ஆரம்பமானது. ☞2

# அரசுக்கு எதிராகக் கொழும்பில் போராட்டம்; இராணுவத் தலைமையகத்துக்குள் ரணில்!

## பாதுகாப்பு நிலைவரங்கள் தொடர்பில் கலந்தாய்வு



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசுக்கு எதிர்ப்புத் தெரிவித்தும், நாடாளுமன்றத்தை உடனடியாகக் கலைக்குமாறு வலியுறுத்தியும் இன்று மாலை கொழும்பில் போராட்டம் முன்னெடுக்கப்படுகின்றது.

பல்வேறு தொழிற்சங்கங்கள், சிவில் அமைப்புகள் மற்றும் அரசியல் கட்சிகள் இணைந்து இந்தப் போராட்டத்தை முன்னெடுக்கின்றனர்.

ஜூலை 9 ஆம் திகதி நடத்தப்பட்ட கோட்டாபய ராஜபக்ஷவுக்கு எதிரான போராட்டத்தின் வெற்றியைத் தொடர்ந்து இன்று ரணில் விக்கிரமசிங்கவின் அரசுக்கு எதிராகப் போராட்டம் முன்னெடுக்கப்படுகின்றது. ☞2

## ரணிலை நேரில் சந்திக்க மறுத்துள்ளது ஜே.வி.பி.



சர்வகட்சி அரசு தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் இன்று நடைபெறவிருந்த கலந்துரையாடலில் தாம் பங்குகொள்ளப் போவதில்லை என்று அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான ஜே.வி.பி. தெரிவித்துள்ளது.

எனினும், ஜனாதிபதியிடம் ☞2

## மின்சாரக் கட்டணம் 75 வீதத்தால் உயர்வு



மின்சாரக் கட்டணத்தை ஒகஸ்ட் 10 ஆம் திகதி முதல் 75 வீதத்தால் அதிகரிப்பதற்கு இலங்கை பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழு அனுமதி வழங்கியுள்ளது.

கொழும்பில் இன்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போது மேற்படி ஆணைக்குழுவின் தலைவர் இந்தத் தகவலை வெளியிட்டார். ☞2

## நீர்க் கட்டணத்தை அதிகரிக்கவும் அனுமதியளித்தது அமைச்சரவை



நீர்க் கட்டணத்தை அதிகரிப்பதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

அமைச்சரவைக் கூட்டம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நேற்று மாலை தொடக்கம் இரவு வரை நடைபெற்றது. இதன்போதே நீர்க் கட்டணத்தை அதிகரிப்பதற்கான யோசனை, அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவால் முன்வைக்கப்பட்டது. அதற்கு அமைச்சரவையும் அனுமதி வழங்கியுள்ளது.

## ஜோன்ஸ்டனுக்கு எதிராக குற்றப்பத்திரிகை தாக்கல்



முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ உட்பட இருவருக்கு எதிராக கொழும்பு மேல் நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இலஞ்ச ஊழல் தொடர்பான குற்றச்சாட்டுகள் தொடர்பிலேயே இந்தக் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

## அரச எதிர்ப்புப் போராட்டக்காரர்களை அடக்கி ஒடுக்கவே அவசரகாலச் சட்டம்

### ஐ.நா. நிபுணர்கள் கடும் விசனம்




2022ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 2ஆம் திகதி முதல் இலங்கை அரசு, அமைதியான போராட்டக்காரர்களை அடக்கி ஒடுக்குவதற்கும் பொருளாதார நெருக்கடிக்கு எதிராகக் குரல் எழுப்புபவர்களுக்கும் எதிராக அவசரகாலச் சட்டத்தை மீண்டும் மீண்டும் பயன்படுத்துகின்றனர் என்று ஐக்கிய நாடுகள் மனித உரிமை நிபுணர்கள் கண்டித்துள்ளனர்.

தலைநகர் கொழும்பிலும் நாடு முழுவதிலும் பல மாதங்களாக நடைபெற்ற வெகுஜனப் ☞2

## சொல்வதைக் கேட்க வேண்டும் ரணில்

### மனித உரிமைகள் கண்காணிப்பகம் வலியுறுத்து




இலங்கையின் புதிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அனைத்து இலங்கையர்களின் அடிப்படை உரிமைகளைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை தனது நிர்வாகம் மேற்கொள்வதை உறுதிப்படுத்த வேண்டும் என்று சர்வதேச மனித உரிமைகள் கண்காணிப்பகம் கோரியுள்ளது. கண்காணிப்பகம் இன்று அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. ☞2

## யாழில் மீளவும் அதிகரிக்கும் கொரோனா

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் கடந்த ஒரு வாரத்தில் கொரோனாத் தொற்றுக்குள்ளான 6 நோயாளிகள் சேர்க்கப்பட்டு, சிகிச்சை பெறுகின்றனர் என்று யாழ். போதனா ☞2

## முற்போக்குக் கூட்டணியை அசைக்க முயல வேண்டாம்

### அந்தப் பருப்பு இந்த நெருப்பில் வேகாது என்று மனோ ஆவேசம்



தமிழ் முற்போக்குக் கூட்டணியையும் அசைக்க யாரும் முயல வேண்டாம். இங்கே அந்தப் பருப்பு, இந்த நெருப்பில் வேகாது.

- இவ்வாறு தமிழ் முற்போக்குக் ☞2

## பொருளாதாரத்தை மீட்க விசேட திட்டம்; தம்மிக்க தலைமையில் உயர்மட்டக் குழு



சுதந்திரத்தின் பின்னர் நாடு எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடி நிலையிலிருந்து நாட்டை மீட்டெடுப்பதற்காக விசேட பொருளாதார அபிவிருத்திக் குழுவை உருவாக்குவதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

உருவாக்கப்படவுள்ள உத்தேச அபிவிருத்திக் குழுவின் தலைவராக ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினரும் பிரபல வர்த்தகருமான தம்மிக்க பெரேராவை நியமிப்பதற்கு ☞2

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



## யாழில் மீளவும் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வைத்தியசாலை பிரதிப் பணிப்பாளர் மருத்துவர் சி.யமுனாநந்தா தெரிவித்துள்ளார்.

வைத்தியசாலைக்கு வரும் நோயாளர்களில் சிலரில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையிலேயே குறித்த நபர்கள் தொற்றாளர்களாக அடையாளப்படுத்தப்பட்டனர்.

இவர்கள் அனைவரும் ஏற்கனவே கொரோனாத் தடுப்பூசியை ஒரு வருடத்துக்கு முன்னர் பெற்றுக்கொண்டவர்கள் என்று பிரதிப் பணிப்பாளர் மேலும் குறிப்பிட்டுள்ளார். அதேவேளை, கடந்த ஜூலை மாதம் கொரோனாத் தொற்றால் யாழ்ப்பாணத்தில் இருவர் உயிரிழந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## முற்போக்குக் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் எம்.பி. தெரிவித்தார்.

இது தொடர்பில் மனோவின் முகநூல் பதிவில்,

தமிழ் முற்போக்குகே கூட்டணி, அரசுடன் இணையவோ, அமைச்சுப் பதவிகள் பெறவோ, தீர்மானிக்கவே இல்லை.

உண்மையில், 'நாட்டை கரை சேர்க்க தேசிய சர்வகட்சி வேலைத்திட்டம்' என்ற தலைப்பில் ஜனாதிபதி விடுத்த அழைப்புக்கான எமது பதில் தொடர்பில், ஐக்கிய மக்கள் கூட்டணிக்குள்ளே நாம் கடுமையாக இரவு பகல் உரையாடிக்கொண்டு இருக்கின்றோம்.

ஜனாதிபதியை, ஐக்கிய மக்கள் கூட்டணியாகக் கடந்த 5ஆம் திகதி சந்தித்தோம்.

தமிழ் முற்போக்குக் கூட்டணியாக 10ஆம் திகதி சந்திக்கவுள்ளோம். நாம் பிரதிநிதித்துவம் செய்யும் எமது மக்களின் அபிலாஷை, சவால்கள் பற்றி உரையாடுவோம்.

இதற்குள் 'அமைச்சுப் பதவிகளுக்காக கூட்டணிக்குள் முரண்பாடு என்று 'பொறுப்புள்ள தினக்குரல், காலைக்கதிர்' உட்பட சில மஞ்சள், கடும் மஞ்சள் இணையங்கள் எழுதுகின்றன.

ஏற்கனவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள், 'டலசுக்கு எத்தனை பேர், ரணிலுக்கு இத்தனை பேர்' என்று கும்மி அடித்து, சிரித்து முடித்தாகி விட்டது.

அதைப் பார்த்து, இப்போது தமிழ் முற்போக்குக் கூட்டணியையும் அசைக்க யாரும் முயல வேண்டாம். இங்கே அந்தப் பருப்பு, இந்த நெருப்பில் வேகாது. நாம் ஒருசேரத்தான் முடிவுகள் எடுப்போம் - என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

## பொருளாதாரத்தை .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உத்தேசிக்கப்பட்டுள்ளது.

நாட்டின் தற்போதைய பொருளாதார நெருக்கடியிலிருந்து நாட்டைக் கட்டியெழுப்புவதற்குத் தேவையான பொருளாதார கொள்கையொன்றைத் திட்டமிடுதல், அதனை நடைமுறைப்படுத்துதல் மற்றும் மேற்பார்வை செய்தல் ஆகிய முக்கிய பொறுப்புக்கள் மேற்படி குழுவுக்கு ஒப்படைக்கப்படவுள்ளன என்று நிதி அமைச்சின் உயர் அகாரி ஒருவர் தெரிவித்தார்.

மாதாந்தம் 800 இற்கும் 900 இற்கும் இடைப்பட்ட அமெரிக்க டொலர் வருமானமாகக் கிடைத்து வந்துள்ள எமது நாட்டின் தற்போதைய நிலையில் அந்தத் தொகை 250 இற்கும் 300 இற்கும் இடைப்பட்ட தொகையாகக் குறைவடைந்துள்ளது.

அதனைத் தெளிவுபடுத்திய அந்த அதிகாரி புதிய அபிவிருத்திக் குழுவின் முக்கிய செயற்பாடு முடிந்தளவு நாட்டுக்கு வெளிநாட்டு செலாவணியைக் கொண்டுவரும் நடவடிக்கைகளுக்கு நடுநிலை வகிப்பதே என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

புதிய அபிவிருத்திக் குழுவின் தலைவருக்கு அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர் ஒருவருக்குள்ள அதிகாரம் மற்றும் வசதிகள் வழங்கப்படுவதுடன் பொருளாதார நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்டெடுப்பதற்கான நேரடிப் பங்களிப்பை அவர் வழங்கும் வகையில் அனைத்து வாய்ப்புகளையும் அவருக்கு வழங்க அரசு தயாராகவுள்ளது என்றும் அந்த அதிகாரி மேலும் தெரிவித்துள்ளார்.

## சொல்வதைக் கேட்க .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அத்துடன் தமது கடிதத்தில் முக்கிய மனித உரிமை கவலைகளை மனித உரிமைகள் கண்காணிப்பகம் கோடிட்டுக் காட்டியுள்ளது.

பொருளாதார முறைகேடு மற்றும் ஊழலுக்கு எதிரான பல மாதங்களாக இடம்பெற்ற பரவலான எதிர்ப்புகளுக்குப் பின்னர் அப்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பதவி விலகியதை அடுத்து, 2022 ஜூலை 21 அன்று விக்கிரமசிங்க ஜனாதிபதியாகப் பதவியேற்றார்.

இந்தநிலையில் பல ஆண்டுகளாக மேற்கொள்ளப்பட்ட தவறான நிர்வாகம் மற்றும் உரிமை மீறல்களைத் தொடர்ந்து இலங்கை அரசியல் பொருளாதார மற்றும் மனித உரிமைகள் நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளதாக கண்காணிப்பகம் சுட்டிக்காட்டியுள்ளது.

அத்துடன் கருத்துச் சுதந்திரம் ஒன்றுகூடல் உள்ளிட்ட அடிப்படை உரிமைகளுக்கு மதிப்பளித்து பாதுகாப்புப் படைகளின் துஷ்பிரயோகங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் அதேவேளையில் தகுந்த சமூகப் பாதுகாப்புக் கொள்கைகளை வகுத்து நிலவும் ஊழலைக் கையாள்வதன் மூலம் பொதுமக்களை மேலும் சிரமங்களிலிருந்து பாதுகாப்பதற்கு முன்னுரிமை அளிக்க வேண்டும்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பாரிய சவால்களை எதிர்கொள்கின்றார். எனினும், கடுமையான அவசரகாலச் சட்டங்களை விதிப்பது போராட்டத் தலைவர்களை அரசியல் ரீதியாக கைது செய்தல் மற்றும் செயற்பாட்டாளர் குழுக்கள் மீது தீவிர கண்காணிப்பு ஆகியவை இலங்கையின் பயங்கரமான பிரச்சினைகளைத் தீர்க்காது என்று மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் தெற்காசியப் பணிப்பாளர் மீனாட்சி கங்குலி தெரிவித்துள்ளார்.

இலங்கை அரசு மனித உரிமைகள் மற்றும் சட்டத்தின் ஆட்சியைக் கடைப்பிடித்து நெருக்கடிக்கான மூல காரணங்களை நிவர்த்தி செய்தால் மட்டுமே சர்வதேச பொருளாதார உதவி பயனுள்ளதாக இருக்கும் என்பதில் இலங்கையின் பங்காளி நாடுகள் தெளிவான உள்ளன.

எனவே, மனித உரிமைகளுக்கு மதிப்பளித்து செயற்படுமாறு கோரியுள்ள மீனாட்சி கங்குலி, ஜனாதிபதி விக்கிரமசிங்கவுக்கு பரிந்துரைகளையும் முன்வைத்துள்ளார்.

பழிவாங்கல் அல்லது கைதுக்கு அஞ்சாமல் மக்கள் தங்கள் கருத்துக்களை சுதந்திரமாகவும் அமைதியாகவும் வெளிப்படுத்த முடியும் என்பதை உறுதிப்படுத்த வேண்டும்.

தெளிவற்ற அடிப்படை உரிமைகளை மீறும் அவசரகால ஒழுங்குமுறை விதிகளைத் திரும்பப் பெறவேண்டும்

பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் இயற்றப்படும் வரை பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தன்னிச்சையாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளை விடுவிக்க வேண்டும்.

பொருளாதார நெருக்கடியின் விளைவுகளிலிருந்து அனைவரின் உரிமைகளையும் பாதுகாக்க தவறான நிர்வாகம் மற்றும் ஊழலைத் தடுக்க புதிய சமூக பாதுகாப்பு அமைப்பை நிறுவ வேண்டும்.

உலக வங்கி மற்றும் ஐக்கிய நாடுகளின் கூட்டுடன் ஊழல் நிதிகளுக்கான பாதுகாப்பை முடிவுக்குக் கொண்டு வரும் வகையில், இலங்கையில் இருந்து திருடப்பட்ட சொத்துக்களை மீட்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

கடுமையான மனித உரிமை மீறல்கள் மற்றும் உயர்மட்ட ஊழல் குற்றச்சாட்டுகள் மீது சுயாதீனமான மற்றும் பக்கச்சார்பற்ற விசாரணைகளை நடத்தி அதற்குப் பொறுப்பானவர்களை உரிய முறையில் தண்டிக்க வேண்டும்.

இதேவேளை, நாட்டில் சீர்திருத்தம் ஊழலுக்கான பொறுப்புக்கூறல் மற்றும் அடிப்படை உரிமைகளைப் பாதுகாப்பதற்காகவே பல இலங்கையர்கள் தைரியமாக தெருக்களில் இறங்கினர்.

எனவே, போராட்டக்காரர்களை அமைதிப்படுத்த முயற்சிப்பதற்குப் பதிலாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சொல்வதைக் கேட்க வேண்டும் என்று மீனாட்சி கங்குலி வலியுறுத்தியுள்ளார்.

## அரச எதிர்ப்புப் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போராட்டங்களைத் தொடர்ந்து கோட்டாபய ராஜபக்ஷ, ஜூலை 13 அன்று நாட்டை விட்டு வெளியேறி மறுநாள் ஜனாதிபதி பதவியிலிருந்து விலகினார்.

அவருக்குப் பின் வந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஜூலை 17 அன்று மற்றுமொரு அவசரகால நிலையைப் பிரகடனப்படுத்தினார்.

இந்நிலையில், நாடாளுமன்றம் ஜூலை 27ஆம் திகதியன்று தற்போதைய அவசரகால நிலையை மேலும் ஒரு மாதத்துக்கு நீடித்தது.

இதன் மூலம், ஊரடங்கு உத்தரவை விதித்து பாதுகாப்புப் படைகளுக்குப் பரந்த மற்றும் விருப்பமான அதிகாரங்களை வழங்கும் கட்டளைச் சட்டத்துக்கு நாடாளுமன்றம் ஒப்புதல் அளித்துள்ளது.

இத்தகைய அதிகாரங்கள், நீதிமன்ற மேற்பார்வையின்றி போராட்டக்காரர்களைத் தடுத்து வைப்பதற்கும், தனியார் சொத்துக்களைச் சோதனை செய்வதற்கும் படையினரை அனுமதிக்கின்றன.

அவசர நடவடிக்கைகளை தவறாகப் பயன்படுத்துவது குறித்து பலமுறை அரசிடம் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனினும், அதில் பலனில்லை.

இந்தநிலையில், அமைதியான ஒன்றுக்கூடல் மற்றும் கருத்துச் சுதந்திரத்துக்கான உரிமைகளைச் சட்டபூர்வமாகப் பயன்படுத்துவதை மீறும் வகையில் இது போன்ற நடவடிக்கைகளைக் கண்டிப்பதாக ஐ.நா. மனித உரிமை நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த அடக்குமுறை நடவடிக்கைகள் உரையாடலுக்கான வழிகளை மேலும் மூடுகின்றன மற்றும் பதற்றங்கள் அதிகரிக்கும் அரசியல் சூழலை ஏற்படுத்துகின்றன என்று ஐ.நா. மனித உரிமை நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்

2022 மார்ச் முதல் இலங்கை எதிர்கொள்ளும் பாரதூரமான பொருளாதார நெருக்கடியைக் கையாள்வதில் அரசின் மீதான அதிருப்தியை வெளிப்படுத்துவதற்காக ஆயிரக்கணக்கானோர் கொழும்பிலும் நாடு முழுவதிலும் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டுள்ளனர்.

ஆழமடைந்துவரும் பொருளாதார நெருக்கடி ஊழல் குற்றச்சாட்டுகள் அதிகரித்து வரும் பணவீக்கம் எரிபொருள் மற்றும் அத்தியாவசியப் பொருட்களின் பற்றாக்குறை மற்றும் நீடித்த மின்வெட்டு மற்றும் சட்டவிரோத நிதிப் பாய்ச்சலைச் சரியாக நிர்வகிக்கத் தவறியதன் எதிரொலியாக வெகுஜனப் போராட்டங்கள் வேகத்தைப் பெற்றன.

இதன்போது, பாதுகாப்புப் படையினர் அவசரகால நடவடிக்கைகளால் தங்களுக்கு வழங்கப்பட்ட விரிவான அதிகாரங்களைப் பயன்படுத்தி, கண்ணீர்ப்புகை மற்றும் நீர்த்தாரைகளைப் பயன்படுத்த எதிர்ப்பு இயக்கத்தை ஒடுக்கினர்.

2022 ஜூலை 22 அன்று தலைநகர் கொழும்பு - காலிமுகத்திடலில் உள்ள போராட்டக்காரர்களின் முகாமில் பொலிஸார் மற்றும் இராணுவத்தின் கூட்டு நடவடிக்கையின்போது 50 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். பலர் கைதுசெய்யப்பட்டனர்.

இதையடுத்து கடந்த வாரங்களில் ஆர்ப்பாட்டங்களை ஒழுங்கமைப்பதில் ஈடுபட்டுள்ளவர்கள், எதிர்ப்பாளர்கள் மற்றும் எதிர்க்கட்சி அரசியல் கட்சிகளின் உறுப்பினர்கள் பலர் கைதுசெய்யப்பட்டு வருகின்றனர்.

இதைக் கண்டித்துள்ள ஐக்கிய நாடுகளின் நிபுணர்கள், தேசிய பாதுகாப்பை ஒரு சாக்குப்போக்காகக் கொண்டு கருத்து வேறுபாடுகளின் வெளிப்பாடுகளை மூடிவிட முடியாது என்று குறிப்பிட்டுள்ளனர்.

மனித உரிமைப் பாதுகாவலர்கள் உள்ளிட்ட போராட்டக்காரர்கள் அமைதியான போராட்டங்களின் பின்னணியில் பாதுகாக்கப்பட வேண்டும், போராட்டங்களில் பங்கேற்பதற்காக குற்றவியல் பொறுப்பை அவர்கள் எதிர்கொள்ளக்கூடாது என்றும் ஐ.நா. மனித உரிமை நிபுணர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

அத்துடன் அரசு மீண்டும் மீண்டும் அவசரகால நடவடிக்கைகளைப் பயன்படுத்துவதை நிறுத்துமாறும் அதற்குப் பதிலாக பொருளாதார நெருக்கடியின் தாக்கத்தைக் குறைப்பதற்கு அரசியல் மற்றும் பொருளாதார சீர்திருத்தங்கள் குறித்து இலங்கையர்களுடன் திறந்த மற்றும் உண்மையான உரையாடலை நாடுமாறும் ஐக்கிய நாடுகள் மனித உரிமை நிபுணர்கள் கோரியுள்ளனர்.

## ரணிலை நேரில் சந்திக்க ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எழுத்து மூலம் முன்மொழிவுகளைச் சமர்ப்பிக்கக் கட்சி தீர்மானித்துள்ளது என்று ஜே.வி.பியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி தெரிவித்துள்ளார்.

உத்தேச சர்வகட்சி அரசு தொடர்பில் கலந்துரையாடுவதற்காக ஜனாதிபதி மற்றும் மக்கள் விடுதலை முன்னணியினருக்கும் இடையிலான சந்திப்பு இன்று மாலை இடம்பெறவிருந்தது.

முன்னதாக ஜனாதிபதியுடனான பேச்சில் கலந்துகொள்ளும் போதிலும் சர்வகட்சி அரசை அமைப்பதற்கு கட்சி ஆதரவளிக்காது என்று ஜே.வி.பி.. தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## மின்சாரக் கட்டணம் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மின் கட்டணத்தை 229 சதவீதத்தால் அதிகரிப்பதற்கு இலங்கை மின்சார சபை அனுமதி கோரி இருந்தாலும், 75 வீத அதிகரிப்புக்கே அனுமதி வழங்கப்பட்டுள்ளது எனவும் அவர் மேலும் கூறினார்.

## அரசுக்கு எதிராகக் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதன்படி இன்று மாலை விகாரமகாதேவி பூங்காவுக்கு அருகில் இருந்து பேரணிகள் ஆரம்பிக்கப்படுகின்றன.

இந்தப் போராட்டத்துக்குத் தேசிய தொழிற்சங்க மத்திய நிலையத்தில் அங்கம் வகிக்கும் நூற்றுக்கணக்கான தொழிற்சங்கங்கள், அரசுக்கு எதிரான சிவில் அமைப்புகள் மற்றும் அரசியல் கட்சிகள் பல ஆதரவளித்துள்ளன.

இதேவேளை, இன்றைய போராட்டத்துக்குத் தடை விதிக்குமாறு பொலிஸார் நீதிமன்றத்தை நாடிய போதும், அதற்கு தடை விதிக்க நீதிமன்றம் மறுப்புத் தெரிவித்திருந்தது.

போராட்டக்காரர்கள் அமைதியைச் சீர்குலைக்கும் வகையில் நடந்துகொண்டால் பொலிஸார் தமது அதிகாரங்களைப் பயன்படுத்த முடியும் என்று நீதிமன்றம் அறிவித்திருந்தது.

இதேவேளை, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பத்தரமுல்லை அகுரேகொடவில் அமைந்துள்ள இராணுவத் தலைமையகத்திற்கு இன்று காலை விஜயம் மேற்கொண்டார்.

அங்கு சென்ற ஜனாதிபதிக்கு இராணுவ அணிவகுப்பு மரியாதையுடன் வரவேற்பளிக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் இராணுவத் தளபதி மற்றும் பிரதமர் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

இராணுவத் தலைமையகம் சென்ற ஜனாதிபதி அங்கு அதிகாரிகளுடன் பாதுகாப்பு நிலவரங்கள் தொடர்பில் கலந்துரையாடல்களிலும் ஈடுபட்டார்.

கொழும்பில் இன்று மாலை அரசுக்கு எதிராக நடைபெறும் போராட்டம் தொடர்பிலும் இதன்போது கலந்துரையாடப்பட்டது என அறியமுடிந்தது.

## கொள்கை விளக்க உரை ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அத்துடன், நாளை 10 ஆம் திகதியும் மற்றும் 12ஆம் திகதியும் முற்பகல் 10 மணி முதல் பிற்பகல் 4.30 மணிவரை நாடாளுமன்றம் கூடவுள்ளது. இவ்விரு நாட்களிலும் கொள்கை விளக்க உரை மீதான விவாதமே இடம்பெறும்.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
தொலைபேசி
இலக்கம்-
076 443 8622

நமது பார்வை
உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## சீனக் கப்பல் சர்ச்சை

ராஜபக்ஷக்களுக்கும் சீன கப்பல்களுக்கும் எட்டாம் பொருத்தம் போலும்.

இரண்டு தடவைகள் அவர்களின் அதிகாரங்கள் பறிக்கப்பட்ட போதும் சந்தர்ப்பவசமாகவோ, இல்லையோ சீனக் கப்பல்களின் தொடர்புகள் ஏற்பட்டிருந்தமை கவனிக்கத்தக்க விடயம்.

2014 பிற்பகுதியில் சீனாவின் இரண்டு நீர்மூழ்கிக் கப்பல்கள் கொழும்பு துறைமுகத்திற்கு வந்து, தரித்து, எரிபொருள் உட்பட அவசிய பொருள்களை மீள நிரப்பிச் செல்வதற்கு அனுமதிக்கப்பட்டது.

அந்த அனுமதியை அப்போது இந்தியா கடுமையாக ஆட்சேபித்தது. இரு நாடுகளும் 1987 இல் செய்து கொண்ட இலங்கை – இந்தியா ஒப்பந்த ஏற்பாடுகளுக்கு இந்நடவடிக்கை முரணானது, சீன நீர்மூழ்கிக் கப்பல்களின் கொழும்பு வருகை இந்தியாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலானது, எனவே இந்த நடவடிக்கையை முன்னெடுக்க வேண்டாம் என்று இந்தியத் தரப்பில் மிகக் கடுமையாக ராஜதந்திர ரீதியில் ஆட்சேபிக்கப்பட்டது.

ஆனால் யுத்த வெற்றியை அடுத்து மிக வலுவான அரசியல் நிலையில் அதிகாரத்தைப் பெற்றிருந்த ராஜபக்ஷக்கள் இந்திய ஆட்சேபத்தை உதாசீனம் செய்து புறக்கணித்து விட்டேதியாக நடந்து கொண்டனர்.

அதை அடுத்து, 2015 ஜனவரி ஜனாதிபதித் தேர்தலுக்கான விடயங்கள் கட்டவிழ்ந்தன.

அந்தத் தேர்தலில் தோற்கடிக்கப்பட்ட ராஜபக்ஷக்கள் வீட்டுக்கு அனுப்பப்பட்டனர்.

தமது தோல்வியில் இந்தியாவின் நேரடிப் பங்களிப்பு ஈடுபாடுகள் – சூசக நகர்வுகள் – இருந்தன என்று மஹிந்த ராஜபக்ஷ தோற்ற பின்னர் பகிரங்கமாகப் புலம்ப வேண்டியவரானார். அச்சமயம் தமக்கு எதிராக எதிர்க்கட்சிகளை ஒன்று திரட்டிய பின்புலத்தில் நேரடியாக இந்தியா செயற்பட்டது என்ற அவரது குற்றச்சாட்டுக்குப் பெரிய அளவில் மறுப்பு வெளியிடப்படவில்லை. அக்கூற்று சவாலுக்கும் உட்படுத்தப்படவில்லை.

இப்போது அவரது சகோதரர் கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதி தேர்தலில் பெரு வெற்றியடைந்த நிலையில், இடைவழியில் அதிகாரத்திலிருந்து துரத்தப்பட்டிருக்கின்றார்.

இப்போதும் சீனக் கப்பல் ஒன்றின் சர்ச்சை வந்திருக்கின்றது. சீனாவின் உளவுக் கப்பலான 'யுவான் வாங் – 5' அம்பாந்தோட்டைத் துறைமுகத்திற்கு நாளை மறுதினம் வந்து, சுமார் ஒரு வார காலம் தங்கி இருந்து, 'இந்தியப் பெருங்கடல் பிராந்தியத்தின் வடமேற்குப் பகுதியில் விண்வெளிக் கண்காணிப்பு, செயற்கைக் கோள் கட்டுப்பாடு மற்றும் ஆராய்ச்சி கண்காணிப்பு நடவடிக்கைகளை முன்னெடுக்க' திட்டமிட்டிருந்ததாகக் கூறப்படுகின்றது.

இந்தக் கப்பலின் வருகைக்கும் கடந்த மாதத்தில் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாவதற்கு முன்னரே கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசு தன்பாட்டில் அனுமதி வழங்கியிருந்தது என்றும், அதனால் ஏற்பட்ட பெரும் ராஜதந்திரச் சிக்கலை – நெருக்கடியை – ரணிலின் அரசு எதிர்கொண்டு தீர்க்க வேண்டி இருக்கின்றது என்றும் சுட்டப்படுகின்றது.

'இந்தியக் கடற்படைக்கு எதிரான சாத்தியமான நீர்மூழ்கி எதிர்ப்பு நடவடிக்கைகளுக்காக கடல் தளத்தை வரைபடமாக்குவதில் இக்கண்காணிப்பு கப்பல் ஈடுபட்டுள்ளது என்பதை அறிந்திருந்தும் இக்கப்பலின் வருகைக்கும் நிலை கொள்ளலுக்கும் இலங்கை அனுமதிய அளித்திருக்கின்றது' என்று பாரிய குற்றச்சாட்டை முன்வைத்துள்ளது இந்தியா.

பிராந்திய நெருக்கடிகளையும் கள யதார்த்தங்களையும் புரிந்து கொள்ளாமல் அல்லது கவனத்தில் எடுக்காமல் கொழும்பு பொறுப்பற்று நடந்து கொள்கின்றது என்ற குற்றச்சாட்டுக்கு இது நல்லதோர் உதாரணம்.

# சுற்றுலா விசாக்களில் வேலைதேடி செல்கின்றனர் இலங்கையர்கள்!

## நாடுகடத்தும் மலேசியா

சுற்றுலா விசாக்களை வேலைக்கான விசாக்களாக மாற்றிக்கொள்ளலாம் என்ற நம்பிக்கையில் பல இலங்கையர்கள் மலேசியாவுக்கு செல்கின்றனர் என இலங்கைப் பாதுகாப்பு அமைச்சகத்தின் கீழ் இயங்கும் தேசிய மனித கடத்தல் தடுப்பு செயல் படை கண்டறிந்துள்ளது.

இதன் காரணமாக, சுற்றுலா விசாக்கள் எனப்படும் பார்வையாளர் விசாக்களில் செல்லும் இலங்கையர்களை மலேசிய குடிவரவுத்துறை அதிகாரிகள் ஆராய்ந்து வருகின்றனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ்வாறு வாரந்தோறும் 20 இலங்கையர்களுக்கு மலேசிய அதிகாரிகள் அனுமதி மறுக்கின்றனர் எனவும் அவர்களை விமான நிலையத்தில் இருந்து நேரடியாக இலங்கைக்கு நாடுகடத்துவதாகவும் இலங்கைப் பாதுகாப்பு அமைச்சகம் தனது செய்திக்குறிப்பில் கூறியுள்ளது.

இந்த கட்டுப்பாடுகளையும் மீறி சுற்றுலா விசாக்கள் மூலம் மலேசியாவுக்குள் நுழைந்த பல இலங்கையர்கள், தரகர்களின் பேச்சை நம்பி மோசமான நிலையில் சிக்கியுள்ளனர் என்று சொல்லப்படுகிறது. அவர்கள் மோசமான சூழ்நிலைகளின் கீழ் வலுக்கட்டாயமாக எவ்வித தொழிலாளர் உரிமைகளுமின்றி வேலைகளில் ஈடுபடுத்தப்படுகின்றனர். இவ்வாறு செல்லும் இலங்கையர்கள் மனித கடத்தலில் பாதிக்கப்பட்டவர்களாகி உள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி நாட்டில் உள்ள அனைத்து மக்களையும் கடுமையாகப் பாதித்துள்ள நிலையில், பலர் வெளிநாடுகளுக்கு செல்ல முயன்று வருகின்றனர். ஏற்கனவே ஆஸ்திரேலியா, இந்தியா போன்ற நாடுகளில் இலங்கையர்கள் படகு வழியாகத் தஞ்சமடையும் சம்பவங்கள் நிகழ்ந்திருக்கின்றன – நிகழ்ந்து வருகின்றன.

அந்த வகையில், தற்போது இலங்கையர்கள் மலேசியாவுக்கு செல்லும் நிகழ்வுகள் வெளிச்சத்துக்கு வந்துள்ளன.

# உயிரிழந்த சிறுத்தைப் புலி தொடர்பில் உடனடியாக விசாரணை மேற்கொள்க!

## அமைச்சர் மஹிந்த அமரவீர பணிப்பு



ஹற்றன், டிக்கோயா – வனராஜா சமர்ஹில் தோட்டப் பகுதியில் உள்ள மரமொன்றில் ஏறிய நிலையில் உயிரிழந்த சிறுத்தைப் புலியின் மரணம் தொடர்பில் உடனடியாக விசாரணைகளை மேற்கொள்ளுமாறு விவசாய வனஜீவராசிகள் மற்றும் வன வளங்கள் பாதுகாப்பு அமைச்சர் மஹிந்த அமரவீர, அமைச்சின் செயலாளர் சந்திரா ஹேரத்துக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

இதற்கமைய, சமர்ஹில் தோட்டப் பகுதியில் உள்ள மரக்கறி தோட்டத்தில் அமைக்கப்பட்டிருந்த வலையில் சிக்கி காயமடைந்த சிறுத்தை காயத்துடன் கம்பியில் அகப்பட்டவாறே மரத்தில் ஏறியுள்ளது.

சிறுத்தையை உயிருடன் பிடிக்கும் நடவடிக்கையில், நல்லதண்ணி வனவிலங்குகள் அலுவலக அதிகாரிகள் மற்றும் பொலிஸார் நடவடிக்கை எடுத்தமையுடன், சிறுத்தை ஏறிய மரத்தை வெட்டியுள்ளனர்.

இதன்போது சிறுத்தையின் மீது மரம் விழுந்ததால் சிறுத்தை உயிரிழந்ததாகக் கூறப்பட்டிருந்தது.

எவ்வாறாயினும் இவ்விடயம் தொடர்பில் உடனடியாக ஆராயுமாறும், உரிய அதிகாரிகளின் அலட்சியத்தால் சிறுத்தைபுலி உயிரிழந்தது என உறுதி செய்யப்பட்டால் வனவிலங்கு அதிகாரிகளுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்குமாறு செயலாளருக்கு அமைச்சர் பணிப்புரை விடுத்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பான விசேட விசாரணைகளுக்காக மேலதிக செயலாளர் அடங்கிய குழுவொன்று ஹற்றன், டிக்கோயா–சமர்ஹில் தோட்டத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக அமைச்சின் செயலாளர் சந்திரா ஹேரத் அமைச்சருக்கு அறிவித்துள்ளார்.

# சட்டவிரோதமாக விறகு விற்பனையில் ஈடுபட்ட 12 பேர் வடமராட்சியில் கைது!



நீண்டகாலமாக வடமராட்சி கிழக்கு மணல்காடு பகுதியில் இருந்து சட்டவிரோதமாக சவுக்கம் மரத்தை வெட்டி விறகிற்காக விற்பனை செய்ய முற்பட்ட 12 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பருத்தித்துறை பொலிஸாரால் கைது செய்யப்பட்ட இவர்கள் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டுடன் பருத்தித்துறை நீதிமன்றில் முற்படுத்தவுள்ளதாக பருத்தித்துறை பொலிஸ் நிலைய தகவல்கள் தெரிவிக்கின்றன. மிக நீண்டகாலமாக மணல்காடு சவுக்கம் மரங்கள் விறகிற்காக அழிக்கப்பட்டுள்ளன. இது தொடர்பில் பருத்தித்துறை பொலிஸ் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் பிரியந்த அமரசிங்கவின் கவனத்தில் கொண்டுவரப்பட்ட நிலையில் அவரது தலைமையில் குறித்த கைது நடவடிக்கைகள் இடம்பெற்றுள்ளன.

# சீனாவுக்கு பதிலடி கொடுக்கும் வகையில் தாய்வான் ராணுவமும் போர் ஒத்திகை



சீனாவுக்கு பதிலடி கொடுக்கும் வகையில் தாய்வான் ராணுவம் போர் ஒத்திகையில் ஈடுபட்டதால் பதற்றம் நிலவி வருகிறது. ஆசிய சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள அமெரிக்க நாடாளுமன்ற சபாநாயகர் நான்சி பெலோசி, கடந்த 3ம் திகதி சீனாவின் கடும் எச்சரிக்கையையும் மீறி தாய்வான் சென்றார்.

25 ஆண்டுக்குப் பிறகு தாய்வான் சென்ற முதல் அமெரிக்க தலைவர் இவர்தான். தாய்வான் தனது நாட்டின் ஒரு பகுதி என்று சீனா உரிமை கொண்டாடி வருவதால், பெலோசி பயணத்தை அதனால் ஏற்க முடியவில்லை. அவரை அனுமதித்த தாய்வானை மிரட்டும் தொனியில், அந் நாட்டை சுற்றி கடல் பகுதியில் 6 இடங்களில் போர் ஒத்திகையை நடத்தியது.

இதன் காரணமாக, தாய்வான் ஜலசந்தியில் கடுமையான போர்ப் பதற்றம் ஏற்பட்டுள்ளது. இந்த பயிற்சி ஞாயிற்றுக்கிழமை முடியும் என சீனா அறிவித்திருந்தது. சீனா போர் தொடுத்தால், அதை எதிர்கொள்ள தயாராக உள்ளோம் என தாய்வான் ராணுவம் பதிலடி கொடுத்தது. ஞாயிற்றுக்கிழமை தாண்டியும், தாய்வான் எல்லையோரத்தில் சீனா தனது போர்ப் பயிற்சிகளை தொடர்ந்து வருகிறது. இதனை தாய்வான் கடுமையாக விமர்சித்துள்ளது.

இந்நிலையில் சீனாவுக்கு பதிலடி கொடுக்கும் வகையில் தாய்வான் ராணுவம் போர் ஒத்திகையில் ஈடுபட்டதால் பதற்றம் நிலவி வருகிறது.

போர் ஒத்திகை ஏற்கனவே திட்டமிடப்பட்டது தான் எனவும் பதிலடி அல்ல எனவும் தாய்வான் அரசு விளக்கம் அளித்துள்ளது. அமெரிக்கா, பிரிட்டன், உள்ளிட்ட நாடுகள் தாய்வானுக்கு ஆதரவாக உள்ளதால் தென் சீனக் கடலில் தொடர்ந்து பதற்றம் நிலவி வருகிறது.

## வங்கதேசத்தில் போராட்டம்

### பெற்றோல் விலையைக் கண்டித்து



வங்கதேசத்தில் பெற்றோல் விலை உயர்த்தப்பட்டதுக்கு எதிர்ப்பு தெரிவித்து மாணவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். வங்கதேசத்தில் கடந்த 5ம் திகதி எரிபொருள் விலையை அரசு உயர்த்தியது. டீசல் மற்றும் மண்ணெண்ணெய் விலை 42.5 சதவீதமும், பெற்றோல் மற்றும் ஒக்டேன் விலை முறையே 51.1 மற்றும் 51.7 சதவீதமும் விலை உயர்த்தப்பட்டது. எரிபொருள்கள் விலை உயர்த்தப்பட்டதால் பொதுப் போக்குவரத்து கட்டணமும் வெகுவாக உயர்த்தப்பட்டுள்ளது. எனவே எரிபொருள் விலையை குறைக்க வலியுறுத்தி மாணவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தலைநகர் தாகாவில் உள்ள நிக்ஹெட் பகுதியில் ஏராளமான கல்வி நிறுவனங்களைச் சேர்ந்த மாணவர்கள் திரண்டு எரிபொருள் விலை உயர்வுக்கு கண்டனம் தெரிவித்தனர். மேலும் 48 மணி நேரத்திற்குள் எரிபொருளின் விலையை குறைக்க வேண்டும், பொது போக்குவரத்தில் பாதி கட்டணத்தை உறுதி செய்ய வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்துள்ளனர். அதே நேரத்தில் உயர்நீதிமன்றத்தில் பொதுநலன் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.



## பாகிஸ்தானில் தற்கொலை தாக்குதல்


### 4 வீரர்கள் உயிரிழப்பு

பாகிஸ்தானில் பதற்றம் நிறைந்த கைபர் பாக்துன்க்வா மாகாணம், வடக்கு வசிரிஸ்தான் மாவட்டத்தில் இன்று பாதுகாப்புப் படையினரை குறிவைத்து, பயங்கரவாதிகள் தற்கொலைத் தாக்குதல் நடத்தி உள்ளனர். பட்டாசி செக்போஸ்ட் அருகே பாதுகாப்புப் படையினர் வந்த வாகனம் மீது வெடிகுண்டு நிரப்பப்பட்ட வாகனத்தை பயங்கரவாதிகள் மோதச்செய்து பின்னர் வெடிக்க வைத்தனர். இந்த தாக்குதலில் பாதுகாப்பு படை தரப்பில் 4 வீரர்கள் உயிரிழந்தனர். பொதுமக்கள் 2 பேர் உள்ளிட்ட 7 பேர் காயமடைந்தனர். இந்த தாக்குதலுக்கு பிரதமர் ஷாபாஸ் ஷெரீப் கடும் கண்டனத்தை தெரிவித்துள்ளார். மேலும், பயங்கரவாத அச்சுறுத்தலை வேரறுக்க தீவிர நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று கூறினார். தெஹ்ரீக்-தலிபான் பாகிஸ்தான் அமைப்பு சண்டை நிறுத்தத்தை மேற்கொண்டபோதிலும், பழங்குடியின மாவட்டங்களில் பாதுகாப்பு படையினரை குறிவைத்து தாக்குதல் நடத்தி வருவது குறிப்பிடத்தக்கது.

# துப்பாக்கிச் சூடு சம்பவத்தின் எதிரொலி; சிறார்களின் ஆடைகளை கழற்றி சோதனை

### இங்கிலாந்து பொலிஸ் மீது ஆணையம் புகார்

இங்கிலாந்தில் கடந்த 3 ஆண்டில் 650 சிறார்களின் ஆடைகளைஅகற்றிபொலிஸார் சோதனை நடத்தினர் என குழந்தைகள் நல ஆணையர் பரபரப்பு புகார் தெரிவித்தார். இங்கிலாந்து நாட்டின் குழந்தைகள் நல ஆணையர் ரேச்சல் டி சோசா, லண்டன் பெருநகரப் பொலிஸிடம் இருந்து பெறப்பட்ட புள்ளி விவரங்களின்படி, பெண் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்கள் குறித்து அதிர்ச்சி அறிக்கை வெளியிட்டுள்ளார். அதில், ‘கடந்தாண்டு 15 வயது கறுப்பினப் பள்ளிச் சிறுமி ஒருவர் கஞ்சா வைத்திருந்தார் என



கூறி அவரை பெண் அதிகாரிகள் சோதனை செய்தனர்.

அவர்கள் பள்ளிச் சிறுமியின் ஆடைகளை கழற்றி நிர்வாணப்படுத்தி சோதனை நடத்தினர். அப்போது அந்த சிறுமி மாதவிடாய் காலத்தில் இருந்தார். இருந்தும் பெண் பொலிஸ் அதிகாரிகள் அவரிடம் மரியாதையுடன் நடந்து கொள்ளவில்லை. உரிய ஒத்துழைப்பு அளிக்கவில்லை.

இவ்விவகாரத்தில் காவல் துறை மன்னிப்பு கேட்டது. நாட்டில் அதிகரித்து வரும் துப்பாக்கிச் சூடு சம்பவத்தின் எதிரொலியாக, சோதனை என்ற பெயரில் அத்துமீறல்கள் நடக்கின்றன. மொத்தத்தில் கடந்த 2018 முதல் 2020ம் ஆண்டு வரை கிட்டத்தட்ட மூன்று ஆண்டுகளில் 10 முதல் 17 வயதுடைய 650 சிறார்களின் ஆடைகளை கழற்றி நிர்வாணப்படுத்தி சோதனை நடத்தி உள்ளனர்.

இவர்களில் 95 சதவீதத்திற்கும் அதிகமானோர் 15 வயதுக்கு உட்பட்டவர்கள். மொத்த சிறுமிகளில் 58 சதவீதம் பேர் கறுப்பினத்தவர்கள்.

சிறுமிகளை சோதனை நடத்திய அதிகாரிகளில் பலர் பொருத்தமானவயது வந்தோராக இல்லை. சிறுமிகளிடம் இன ரீதியாக நடந்து கொண்ட ஏற்றத்தாழ்வு குறித்து மிகவும் கவலையடைகிறேன்.

புள்ளிவிவரங்கள் ஆண்டுதோறும் அதிகரித்து வருகின்றன. சோதனைக்கு உட்படுத்தப்படும் சிறுமிகளை சரியான முறையில் மற்றும் மரியாதையுடன் கையாளப்படுவதை உறுதி செய்ய வேண்டும். அதற்காக சட்ட வழிமுறைகளை ஏற்படுத்திட வேண்டும் – என்றார்.

# பண்டிகைக்காலத்தில் வேகமெடுக்கலாம் கொரோனா தமிழகம் உள்பட 7 மாநிலங்களுக்கு மத்திய அரசு எச்சரிக்கை





இந்தியாவில் அடுத்து வரவுள்ள பண்டிகைக் காலங்களை முன்னிட்டு கொரோனா பரவலுக்கான ஆபத்து அதிகரித்துள்ளதாக நிபுணர்கள் எச்சரித்துள் ளனர். இந்தியாவில் தொடர்ந்து சரிவை சந்தித்து வந்த கொரோனாப் பாதிப்பு கடந்த சில நாள்களாக, தினசரி 17,000 என்ற எண்ணிக்கைக்கு அதிகமாகப் பதிவாகி வருகிறது.


இதுவரை டெல்டா, டெல்டா பிளஸ் மற்றும் ஒமிக்ரோன் என்றும் பின்னர் பி.ஏ. வகை எனவும் தொற்று பாதிப்புகளை ஏற்படுத்தி வந்த வைரஸானது மீண்டும் உருமாற்றம் அடைந்து வருகிறது என்ற அதிர்ச்சித் தகவ லும் வெளியாகியுள்ளது. இந்தியாவில் கொரோனா பாதிப்புகள் அதிகரித்த போதிலும், லேசான அறிகுறிகளே அதிகளவில் காணப்படுகின்றன என நிபுணர்கள் கூறியுள் ளனர். எனினும், பூஸ்டர் டோஸ் செலுத்தி கொள்ளும்படியும், சமூக இடைவெளி மற்றும் முகக்கவசங்களை அணிவது உள்ளிட்ட பாதுகாப்பு நடவடிக்கைகளை பின்பற்றும் படியும் அறிவுறுத்தி வருகின்றனர்.

இந்தநிலையில், தமிழகம் உள்பட 7 மாநிலங்களுக்கு மத்திய சுகாதார செயலாளர் ராஜேஷ் பூஷண் கடிதம் ஒன்றை எழுதியுள்ளார். டெல்லி, கேரளா, கர்நாடகா, மராட்டியம், ஒடிசா, தமிழகம் மற்றும் தெலுங்கானா ஆகிய மாநிலங்களில் வரவிருக்கிற பண்டிகை காலங்களில் பெருமளவில் கூட்டம் கூடுமென்பதால், கொரோனா பாதிப்பு உள்ளிட்ட தொற்று நோய்களின் பரவல் நாடு முழுவதும் பல்வேறு பகுதிகளில் அதி கரிக்கலாம் என அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

அதனால், கொரோனா வழிகாட்டு நெறிமுறைகளை மக்கள் முறையாகப் பின்பற்றி கூட்டம் கூடாமல் தவிர்க்க வேண்டும். இதனைக் கவனத்தில் கொண்டு, பண் டிகைகளை குடும்பத்துடனேயே கொண்டாடவும், சமூக இடைவெளியை பின்பற்றவும் மத்திய சுகாதாரப் பிரிவினால் அறிவுறுத்தல் விடப்பட்டுள்ளது. இதேபோன்று, தமிழகம் உள்ளிட்ட 7 மாநிலங்களும் போதிய பரிசோதனைகளை நடத்துவதை உறுதிப்படுத்த வேண்டும் எனவும், கொரோனா வழிகாட்டு நெறி முறைகளை மக்கள் முறையாக பின்பற்றுவதனை ஊக் கப்படுத்த வேண்டும் என்றும், தொற்று அதிகரிக்காமல் இருக்கதடுப்பூசிபோடும்பணியைதுரிதப்படுத்தும்படியும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

## தெற்கு ரயில்வேயின் ரயில்களில் காகிதம் இல்லா பரிசோதனை





ரயில்களில் உள்ள முன்பதிவுப் பெட்டிகளில் பயணிக்கும் பயணி களிடம், டிக்கெட் பரிசோதகர்கள் தங் களிடமுள்ள காகிதத்தில் அச்சிடப்பட்ட பட்டியலை சரிபார்க்கும் சோதனை நடைமுறையில் தற்போது மாற்றம் கொண்டு வரப்பட்டுள்ளது. இந்த நடைமுறை கணினி மயமாக்கப்பட்டு சுற்றுச்சூழலுக்கு உகந்த காகிதம் இல்லா பரிசோதனை முறை அறி முகப்படுத்தப்பட்டுள்ளது.

தெற்கு ரயில்வே இயக்கும் ரயில் களில் பணியாற்றும் டிக்கெட் பரி சோதகர்களுக்கு கையடக்க டப்லட் உபகரணம் வழங்கப்பட்டுள்ளது. அவற்றை பயன்படுத்தி டிக்கெட் பரிசோதனை மேற்கொள்ளப்படுகி றது. இதற்காக தெற்கு ரயில்வே 857 கையடக்க டப்களை ஒதுக்கீடு செய்துள்ளது. தெற்கு ரயில்வே இயக்கி வரும் சுமார் 185 ரயில்களில் இந்தமுறைஅறிமுகம்செய்யப்பட்டுள் ளது. இந்த வசதி மேலும் பல ரயில் களில் அறிமுகப்படுத்தப்படும் என தெரிகிறது. இதன்மூலம் வெற்றிட மாகஉள்ளஇருக்கைகள்உடனடியாக டிக்கெட் முன்பதிவு இணையத்தளத் திற்கு அனுப்பப்பட்டு, வழியில் உள்ள ரயில் நிலையங்களில் காத்திருக்கும் பயணிகள் அவற்றை முன்பதிவு செய்து கொள்ள இயலும் என்பது குறிப்பிடத்தக்கது.

## விவசாயிகள், ஏழைகளுக்கு எதிரான மசோதா அமைச்சர் செந்தில் பாலாஜி குற்றச்சாட்டு



மத்திய மின்சார சட்டத் திருத்த மசோதா ஏழைகள், விவசாயிகளுக்கு எதிரானது என்று தமிழக மின்சாரத் துறை அமைச்சர் வி.செந்தில் பாலாஜி கூறியுள்ளார்.

இது தொடர்பாக அவர் தி.மு.க. தலைமை அலுவலகமான அண்ணா அறிவாலயத்தில் செய்தியாளர்களுக்கு நேற்று அளித்த பேட்டியில், மத்திய அரசின் மின்சார சட்டத் திருத்த மசோதாவை மக் களவையில் அறிமுகம் செய்துள்ள நிலை யில், இதற்கு தி.மு.க. நாடாளுமன்றக் குழுத் தலைவர் டி.ஆர்.பாலு எதிர்ப்பு தெரிவித்துள்ளார். சட்டத் திருத்தத்தால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை விளக்கியுள் ளார். ஏற்கனவே இதே விவகாரம் தொடர்பாக தமிழக முதல்வரும் எதிர்ப்பு தெரிவித்து மத்திய மின்துறை அமைச் சகத்துக்கு கடிதம் எழுதியுள்ளார்.

மத்திய அரசு கொண்டு வந்துள்ள சட்டத் திருத்த மசோதா ஏழை எளிய மக்களுக்கு எதிரானது. தமிழகத்தில் விவசாயிகள், நெசவாளர்களுக்கு இலவச மின்சாரம் வழங்கப்படுகிறது. ஆனால், இந்த மசோதாவில் உள்ள அம்சங்கள் அவர்க ளின் நலனுக்கு முற்றிலும் எதிராக அமைந் துள்ளன. விவசாயிகள், நெசவாளர்கள், ஏழை மக்களுக்கு எவ்வித பாதுகாப்பும் மசோதாவில் அளிக்கப்படவில்லை. சட்டத் திருத்த மசோதாவால் ஏற்படக் கூடிய பாதிப்புகளைத் தெரிந்து கொண்டே மத் திய அரசு இதனைத் தாக்கல் செய்துள்ளது.

மின் விநியோகத் துறையில் தனியாரை அனுமதிக்கும் பொருட்டு, பல்வேறு அம்சங்கள் இடம்பெற்றுள்ளன. மாநில அரசுகள் மக்களுக்காக உருவாக்கிய மின்சாரக் கட்டமைப்புகளை எவ்வித செலவுமின்றி தனியார்கள் பயன்படுத்தக் கூடிய வகையிலான மசோதா தயாரிக் கப்பட்டுள்ளது. தனியார் நிறுவனங்கள் லாபம் பெற வேண்டும் என்ற ஒரே நோக் கத்துக்காக மட்டுமே இந்தச் சட்ட மசோதா கொண்டு வரப்பட்டுள்ளது. சட்டத் திருத்த மசோதாவில்விவசாயிகள், நெசவாளர்கள், ஏழை, எளிய மக்களுக்கான இலவச மின் விநியோகம் குறித்து எவ்வித தகவலும் இல்லை. இது மிகப்பெரிய பாதிப்பை ஏற்படுத்தக் கூடியது.

மாநில அரசுகளின் கட்டுப்பாட்டில் இருக்கக்கூடிய மின்சார ஒழுங்குமுறை ஆணையங்கள் மத்திய அரசின் கட்டுப் பாட்டிற்குள் செல்லும் வகையில் மசோதாவில் அம்சங்கள் இடம்பெற்றுள் ளன. இதன் காரணமாக மின்சாரக் கட்டணம் பலமடங்கு உயரக்கூடிய அபா யம் இருக்கிறது. பா.ஜ.கவுடன் கூட்டணி அமைத்துள்ள அ.தி.மு.க., இந்த மின்சாரச் சட்டத் திருத்த மசோதா குறித்து தனது நிலைப்பாட்டைத் தெரிவிக்க வேண்டும், என்று குறிப்பிட்டிருக்கிறார்.

## நாடாளுமன்ற மழைக்காலக் கூட்டத்தொடர் நேற்றுடன் நிறைவுக்கு கொண்டுவரப்பட்டது



இந்திய நாடாளுமன்ற மழைக்காலக் கூட்டத்தொடர் ஜூலை 18 ஆம் திகதி தொடங்கி நடைபெற்று வருகிறது. இந்தக் கூட்டத் தொடரில் ஜனாதிபதி மற்றும் துணை ஜனாதிபதி பதவிகளுக்கான தேர்தல் நடைபெற்றது.

அக்னிபாத், விலைவாசி உயர்வு உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகளை எதிர்க்கட்சிகள் எழுப்பின. கடும் அமளியில் ஈடுபட்ட எம்.பிக்கள் இடைநிறுத்தம் செய்யப்பட்டனர். இந்தநிலையில், நாடாளுமன்றின் மழைக்காலக் கூட்டத்தொடர் நேற்றுடன் நிறைவடைந்தது. இந்தத் தொடரானது வரும் 12 ஆம் திகதி வரை நடைபெறவிருந்த நிலையில் முன்னதாகவே நிறைவுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. மக்களவை, மாநிலங்களவை இரண்டும் அடுத்த திகதி குறிப்பிடாமல் ஒத்திவைக்கப்பட்டன.

## அவசர சட்டங்களால் ஆட்சி புரிவது ஜனநாயகத்துக்கு ஏற்புடையதல்ல!

### கேரள ஆளுநர் கருத்து

அவசர சட்டங்களால் ஆட்சிபுரிவது ஜன நாயகத்துக்கு ஏற்புடையதல்ல என்று கேரள ஆளுநர் ஆரிப் முகமது கான் தெரிவித் துள்ளார். கேரளத்தில் லோக் ஆயுக்த திருத்த அவசரச் சட்டம் உள்பட பல அவசர சட்டங்கள் நேற்று திங்கட்கிழமை காலாவதி யாகின. அந்த அவசர சட்டங்களை நீடிக்க மாநில ஆளுநர் ஆரிப் முகமது கானின் ஒப்புதலுக்கு கேரள அரசு அனுப்பி வைத்துள்ளது.

இந்த விடயம் தொடர்பாக டெல்லியில் செய்தியாளர்களோடு உரையாடிய ஆளுநர் ஆரிப் முகமது கான், சுதந்திர தினத்தின் 75 ஆம் ஆண்டு விழா தொடர்பான கூட்டத்தில் பங்கேற்கநான்டெல்லிக்குப்புறப்பட்டபோது பல அவசரச் சட்டங்களை நீடிக்க மாநில அரசு சார்பில் எனது ஒப்புதல் கோரப்பட்டது.

அவற்றை படித்து பார்க்க எனக்கு நேரம் வேண்டும். அந்தச் சட்டங்கள் குறித்து சிந் திக்காமல் நான் ஒப்புதல் அளிக்க வேண்டுமா?, என்று கேள்வியெழுப்பி யுள்ளார்.

அந்தச் சட்டங்களை நீடிப்பதற்கு எந்த விளக்கமும் அளிக்கப்படவில்லை. அவசரச் சூழலில் இதுபோன்ற சட்டங்களை இயற்றலாம். பின்னர் அந்தச் சட்டங்களுக்கு சட்டப்பேரவைக் கூட்டத்தொடரில் ஒப்புதல் அளிக்கப்பட வேண்டும். அதை விடுத்து அவசரகாலச் சட்டங்களை தொடர்ந்து நீடிப்பது சரியல்ல. அவசர காலச் சட்டங்கள் மூலம்தான் ஆட்சி நடைபெறும் என்றால், சட்டப்பேரவை எதற்கு? அவசரச் சட்டங் களால் ஆட்சிபுரிவது ஜனநாயகத்துக்கு ஏற்புடையதல்ல, என்றும் அவர் தெரிவித்தி ருக்கிறார்.

# கல்முனை மாநகர ஆணையர் பதவியேற்க விடாமல் தடுப்பு?

## மேயர் மீது ஆளுநர் சீற்றம்



(பைல் இஸ்மாயில்)

கல்முனை மாநகர சபைக்கு நியமிக்கப்படும் ஆணையாளர்கள் பதவியேற்பதை தொடர்ச்சியாக தடுத்து வருகின்ற கல்முனை மேயருக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத் தெரிவித்தார்.

கிழக்கு மாகாண ஆளுநரினால் கல்முனை மாநகர ஆணையாளராக அன்மையில் நியமிக்கப்பட்ட ஏ.எல்.எம்.அஸ்மி நேற்றுத் திங்கட்கிழமை கடமைகளை பொறுப்பேற்கச் சென்றபோது அவர் கல்முனை மேயரினால் தடுக்கப்பட்டார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதற்கு முன்னரும் கல்முனை மாநகர ஆணையாளராகக் கிழக்கு மாகாண ஆளுநரினால் நியமிக்கப்பட்ட என். சிவலிங்கம், கடந்த ஏப்ரல் முதலாம் திகதி கடமைகளை பொறுப்பேற்கச் சென்றபோதும் அவரும் தடுக்கப்பட்டார்.

இவ்வாறு தொடர்ச்சியாக கல்முனை மாநகர ஆணையாளர்கள் பதவியேற்காமல் தடுக்கப்படுவது தொடர்பில் கிழக்கு மாகாண ஆளுநரை தொடர்புகொண்டு வினவிய போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். இது தொடர்பில் ஆளுநர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் –

மாநகர சபையின் நிர்வாக செயற்பாடுகளில் மேயர் ஒருபோதும் தலையிட முடியாது. எனக்குரிய அதிகாரத்தின் கீழ் மாநகர ஆணையாளர் நியமனத்தினை மேற்கொண்டுள்ளேன். இதனை ஒருபோதும் கல்முனை மேயர் சவாலுக்குட்படுத்த முடியாது. கல்முனை மாநகர சபைக்கு நியமிக்கப்பட்டுள்ள ஆணையாளர் கடமைகளை பொறுப்பேற்க மேயர் அனுமதிக்க வேண்டும். அவ்வாறில்லாமல், தொடர்ச்சியாக ஆணையாளர்கள் கடமைகளை பொறுப்பேற்பதற்கு இடையூறு விளைவிக்கப்படும் பட்சத்தில் கல்முனை மேயருக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படும் – என்றார்.

# கல்முனை கல்வி வலயத்துக்கு பணிப்பாளராக நஜீம் நியமனம்

(காரைதீவு நிருபர் சகா)



கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளராக சம்மாந்துறை வலயக்கல்விப் பணிப்பாளர் எம்.எஸ்.சஹுதுல் நஜீம் நியமிக்கப்பட்டுள்ளார்.

கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் மற்றும் கிழக்கு மாகாண கல்வி பணிப்பாளர் ஆகியோரிடமிருந்து நியமனக் கடிதங்கள் கிடைக்கப் பெற்றிருக்கின்றன.

மருதமுனையைச் சேர்ந்த நஜீம், இலங்கை கல்வி நிருவாக சேவையின் முதலாம் தர அதிகாரி ஆவார். விஞ்ஞான பட்டதாரியான நஜீம் விஞ்ஞான முதுமாணி, கல்வி முதுமாணிப் பட்டங்களை பெற்றுள்ளார்.

15 வருடக் கல்வி நிருவாக சேவையிலுள்ள நஜீம் நாளை பத்தாம் திகதி முதல் கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளராக பதவி ஏற்கிறார்.

கல்முனைவலயக்கல்வி பணிப்பாளருக்கான நேர்முகப் பரீட்சை கடந்த ஜூன் மாதம் 16ஆம் திகதி திருகோணமலையிலுள்ள மாகாணக் கல்வி அமைச்சில் நடைபெற்றது .

நேர்முக தேர்வு முடிவுகள் நேற்று முன்தினம் வெளியானது. அதன்படி இந் நியமனம் இடம்பெற்றது.

2007 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 12ஆம் திகதி இலங்கை கல்வி நிர்வாக சேவையிலே இணைந்து கொண்ட அவர், கடந்த 2019 மார்ச் மாதம் 12ஆம் திகதி தரம் 1க்குப் பதவி உயர்த்தப்பட்டார்.

சம்மாந்துறை வலயக்கல்விப் பணிமனைக்கு 2014 மார்ச் மாதம் மூன்றாம் திகதி நியமிக்கப்பட்டார்.

சம்மாந்துறை வலயத்தில் அதிகூடிய எட்டரை வருடங்கள் சேவையாற்றி நாளை பத்தாம் திகதி கல்முனை வலயக்கல்விப் பணிப்பாளராக பதவி ஏற்கிறார். நஜீம் மும்மொழியிலும் தேர்ச்சி பெற்ற ஒரு சிறந்த நிர்வாகி என்பது குறிப்பிடத்தக்கது.

# கிண்ணியா சூரங்கல் பிரதேசத்தில் உலர் உணவுப் பொதிகள் வழங்கல்




(ஹஸ்பர்)

கிண்ணியா பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள சூரங்கல் கிராம சேவகர் பிரிவில் உள்ள கிண்ணியா அல் அமீன் பாடசாலையில் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் பாடசாலை மாணவர்களின் குடும்பகளுக்கு தலா சுமார் ஆறாயிரம் ரூபா பெறுமதியான உலர் உணவுப் பொதிகள் பாடசாலை வளாகத்தில் வைத்து வழங்கப்பட்டன.

கிண்ணியா பிரதேச செயலாளர் எம்.எச்.ஹனி தலைமையில் நேற்று இடம் பெற்ற இந்த நிகழ்வில் உலர் உணவுப் பொதிகள் முஸ்லிம் எயிட் நிறுவனம் ஊடாக வழங்கி வைக்கப்பட்டன.

இதில் பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் ஐ.முஜீப், முஸ்லிம் எயிட் நிறுவன ஊழியர்கள், பயனாளிகள் எனப் பலர் கலந்து கொண்டனர்.



# மட்டக்களப்பில் சைக்கிள் பாவனையை அதிகரிக்கச் செய்யும் வேலைத்திட்டம்

மட்டக்களப்பு மாவட்டத்தில் மாணவர்கள் மற்றும் பெற்றோர் மத்தியில் சைக்கிள் பாவனையை அதிகரிக்கச் செய்வதற்கான வேலைத் திட்டங்கள் பாடசாலை மட்டத்தில் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

அதன்படி, மட்டக்களப்பு கல்வி வலயத்துக்குட்பட்ட மெதடிஸ்த மத்திய கல்லூரி மற்றும் வின்சன்ட் மகளிர் தேசிய உயர் பாடசாலை ஆகிய பாடசாலைகளின் மாணவர்கள், பழைய மாணவர்கள், ஆசிரியர்களால் சைக்கிள் சவாரி நேற்று நடத்தப்பட்டது.

மெதடிஸ்த மத்திய கல்லூரியின் சைக்கிள் சவாரி நிகழ்வு பாடசாலையின் அதிபர் ஆர்.பாஸ்கர் தலைமையில் ஆரம்பித்துவைக்கப்பட்டது.

இன்றைய சூழ்நிலையில் எரிபொருளின் தட்டுப்பாடு, விலையேற்றம் காரணமாக மோட்டார் சைக்கிள் மற்றும் வாகனங்களை அதிகளவாக பயன்படுத்தும் பெற்றோர் பெரும் சிரமங் களை எதிர்கொண்டுவருகின்றனர்.

குறிப்பாக, இதன் காரணமாக பாடசாலை மாணவர்களின் வரவும் குறைந்து வருவதால் சைக்கிளே சிறந்த தெரிவு என்பதை வெளிப்படுத்தும் வகையில் இந்த சைக்கிள் சவாரி ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது.

# கதிர்காமத்தில் வள்ளியம்பாள் ஆலய முன்றிலில் நேற்றுத் தீமிதிப்பு நிகழ்வு





வரலாற்று பிரசித்தி பெற்ற கதிர்காமம் கந்தன் ஆலய ஆடி வேல்விழாவை ஒட்டி வள்ளியம்பாள் ஆலயம் முன்றலில் நேற்று திங்கட்கிழமை காலை தீமிதிப்பு இடம்பெற்ற போது எடுக்கப்பட்ட படங்கள்.... (படங்கள்: காரைதீவு நிருபர் சகா).

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# எந்தத் தேவைகளுக்கும் உதவாத இலகுமரம் போன்றதே கூட்டமைப்பு!

## வடமாகாண கடற்றொழிலாளர் இணைய தலைவர் காட்டம்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மக்களின் பிரச்சினைகள் எதனையும் கண்டு கொள்வதில்லை எனவும் அது எந்த தேவைக்கும் உதவாத இலகு மரம் போன்றது எனவும் வடமாகாண கடற்றொழிலாளர் இணைய தலைவர் கா. அண்ணாமலை தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் நடத்திய ஊடக சந்திப்பிலே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு –

வடக்கு கடற்றொழிலாளர்கள் மண்ணெண்ணெய் இன்றி இரண்டு மாதங்களுக்கு மேலாக பெரிதும் பாதிக்கப்படுகின்றனர்.



இந்த கடலை சுற்றி இருக்கின்றவர்களுக்கு எரிபொருள் இதுவரைக்கும் கிடைக்கவில்லை. மண்ணெண்ணெய் இறக்குமதி செய்யாமல் பெற்றோல் இறக்குமதி செய்து ஒரு ரூபா அந்நிய செலாவணியாவது பெற்றுக் கொண்டீர்களா? எரிபொருள் தான் முக்கியம் என்றால் அதில் எது மிக முக்கியம் என்று முதலில் பார்க்க வேண்டும்.

விவசாயம், கடற்றொழிலுக்கு மிக முக்கியமானது மண்ணெண்ணெய், எரிபொருள் அமைச்சர் மண்ணெண்ணெய் வருகிறது என்று சொல்லிக்கொண்டே இருக்கிறாரே தவிர இதுவரை எதுவும் வரவில்லை. – என்றார்.

# பாகிஸ்தான் போர்க்கப்பலை நங்கூரமிட கொழும்புத் துறைமுகத்தில் அனுமதி!

## இந்திய கடல் எல்லைக்குள் மற்றுமொரு பாகிஸ்தான் போர்க் கப்பல்

பாகிஸ்தானின் தைமூர் என்ற போர்க்கப்பலை கொழும்பு துறைமுகத்தில் நங்கூரமிடுவதற்கு இலங்கை அரசாங்கம் அனுமதி வழங்கியுள்ளதாகச் செய்திகள் வெளியாகியுள்ளன.

இதேவேளை, பாகிஸ்தான் கடற்படையின் போர்க்கப்பலான ஆலம்கிர், திங்கட்கிழமை இந்தியாவின் குஜராத் கடல் பகுதியில் இந்தியா மற்றும் பாகிஸ்தான் நாடுகளுக்கு இடையிலான கடல் எல்லையைக் கடந்து இந்திய கடற்பகுதிக்குள் நுழைந்தது.

உடனடியாக இதை அறிந்த இந்திய கண்காணிப்பு விமானம், பாகிஸ்தான் போர்க் கப்பலின் இருப்பிடம் தொடர்பாக எச்சரிக்கை விடுத்ததுடன் அதன் பகுதிக்குத் திரும்பும்படி வலியுறுத்தியது.

இந்நிலையில், கொழும்பு துறைமுகத்தில் நங்கூரமிடுவதற்கு இலங்கை அரசாங்கம் அனுமதி வழங்கியுள்ள பாகிஸ்தானின் தைமூர் என்ற போர்க்கப்பலுக்கு பங்களாதேஷ் அனுமதி மறுத்துள்ளது.

சீனாவில் கட்டமைக்கப்பட்ட பி.என்.எஸ். தைமூர் என்ற இந்த போர்க்கப்பல், ஷாங்காய் நகரிலிருந்து கராச்சிக்கு செல்லும் வழியில் கொழும்புக்கு, நல்லெண்ண நோக்கில் பயணிப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த போர்க்கப்பல் கம்போடிய மற்றும் மலேசிய கடற்படைகளுடன் பயிற்சிகளை நடத்திய நிலையிலேயே பாகிஸ்தானின் கராச்சி திரும்புகிறது.

ஷாங்காயில் உருவாக்கப்பட்ட இந்த கப்பல், கராச்சிக்கு தனது முதல் பயணத்தை மேற்கொள்கிறது.

கராச்சியில் பாகிஸ்தான் கடற்படையில் இணைவதற்குச் செல்லும் வழியில் கொழும்பு துறைமுக அழைப்பை ஏற்று, பாகிஸ்தானின் இந்த ஏவுகணைப் போர்க்கப்பல், இலங்கை வருகிறது.

இந்த கப்பல் எதிர்வரும் 12 ஆம் திகதி முதல் 15 ஆம் திகதி வரை கொழும்பு துறைமுகத்தில் நங்கூரமிட்டிருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஏற்கனவே சீனாவின் யுவான் வோங் – 5 என்ற உளவுக்கப்பல் ஒன்று அம்பாந்தோட்டைக்கு வருவதற்கு திட்டமிட்டிருந்த நிலையில், மேற்படி கப்பலின் வருகைக்கு இந்தியா கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ள நிலையில், தற்போது இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையில் ராஜதந்திர ரீதியில் சிறு இடைவெளியை ஏற்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையிலேயே பாகிஸ்தானின் தைமூர் என்ற போர்க்கப்பலின் வருகை தற்போது அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# புதிதாக 50 எரிபொருள் நிரப்பு நிலையங்களை நாட்டில் திறக்க ஐ.ஓ.சிக்கு கிடைத்தது அனுமதி!




இலங்கையில் புதிதாக 50 எரிபொருள் நிரப்பு நிலையங்களைத் திறப்பதற்கு எரிசக்தி அமைச்சரிடம் இருந்து லங்கா ஐ.ஓ.சி. நிறுவனம் அனுமதியைப் பெற்றுள்ளது.

லங்கா ஐ.ஓ.சி நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் மனோஜ் குப்தா, நேற்று கொழும்பு பங்குச் சந்தைக்கு இதனைத் தெரிவித்துள்ளது.

# செம்மணிப் படுகொலை 26 ஆவது ஆண்டு நினைவு

யாழ்ப்பாணம் – செம்மணி பகுதியில் படுகொலை செய்யப்பட்ட சுண்டிக்குளி பாடசாலை மாணவி குமாரசாமி கிரிசாந்தியின் 26 ஆவது ஆண்டு நினைவு தினம் நேற்று அனுஷ்டிக்கப்பட்டது.

1996 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 7 ஆம் திகதி யாழ். சுண்டிக்குளி கல்லூரி மாணவி கிரிசாந்தி வீதியால் சென்று கொண்டிருந்த வேளை, செம்மணி பகுதியில் அமைக்கப்பட்டிருந்த இராணுவ முகாமில் தங்கியிருந்த இராணுவத்தினர் கிரிசாந்தியை வழிமறித்திருந்ததுடன், அவர் சித்திரவதை செய்யப்பட்டு பின்னர் படுகொலை செய்யப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# எதிர்வரும் சில தினங்களில் அரிசியின் விலை குறையும்!

கடந்த காலங்களில் சந்தையில் அதிகரித்துள்ள அரிசியின் விலை எதிர்வரும் சில தினங்களில் குறைவடையும் என அரிசி உற்பத்தியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இந்தியா மற்றும் சீனாவில் இருந்து அரிசி இறக்குமதி செய்யப்படுவதால், சந்தையில் அரிசி விற்பனையும் குறைந்துள்ளதாகவும் அந்தச் சங்கம் கூறியுள்ளது. இந்நிலையில் எதிர்காலத்தில் விலை குறையும் என அரிசி உற்பத்தியாளர்கள் சங்கத்தின் தலைவர் பி. கே.ரஞ்சித் தெரிவித்துள்ளார்.

# அதிக இலாபம் ஈட்டிய நிறுவனமாக லிற்றோ!

பல வருடங்களின் பின்னர் ஜுலை மாதத்தில் அதிக இலாபம் ஈட்டிய நிறுவனமாக லிற்றோ மாறியுள்ளதாக நிறுவனத்தின் தலைவர் முதித பீரிஸ் தெரிவித்துள்ளார். கடந்த ஆண்டு நாட்டில் நிலவும் வீட்டு எரிவாயு சிலிண்டர் பற்றாக்குறையை தீர்க்கும் வகையில், கடந்த 22 நாள்களில் சுமார் 27 லட்சம் உள்நாட்டு எரிவாயு சிலிண்டர்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன. உலகசந்தைவிலையுடன் ஒப்பிடும் போது உள்நாட்டு எரிவாயு சிலிண்டர் விலை குறைப்பு அறிவிக்கப்படும் என்றும் லிற்றோ தலைவர் மேலும் குறிப்பிட்டார்.

# திரிபோஷா வழங்க முடிவு




பாலூட்டும் தாய்மார்கள் மற்றும் கர்ப்பிணித் தாய்மார்களுக்கு தேவையான திரிபோஷாவை, சுகாதார மற்றும் வைத்திய அதிகாரிகளின் அலுவலகங்கள் ஊடாக, இந்த வாரத்துக்குள் வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என இலங்கை திரிபோஷா நிறுவனம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக நிறுவனத்தின் தலைவர் தீப்தி குலரத்ன தெரிவிக்கையில் –

சுமார் 7 லட்சத்து 20 ஆயிரம் திரிபோஷா பொதிகளை நிறுவனம் தற்போது தயாரித்துள்ளது. எதிர்வரும் சில வாரங்களில் குழந்தைகளுக்கு தேவையான திரிபோஷாவை உற்பத்தி செய்ய முடியும் என்று தெரிவித்தார்.

# இராணுவத் தலைமையகத்துக்கு ஜனாதிபதி ரணில் விஜயம்

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பெலவத்தை, அக்குரேகொடவிலுள்ள இராணுவத் தலைமையகத்துக்கு விஜயம் செய்துள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் விக்கும் லியனகே மற்றும் பாதுகாப்புச் செயலாளர் கமல் குணரத்ன ஆகியோர் வரவேற்றனர்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் பிரதமர் தினேஷ் குணவர்தனவும் இந்த விஜயத்தின் போது கலந்துகொண்டார்.

# எரிவாயுவுக்கு விலைச் சூத்திரத் திட்டத்தை நடைமுறைப்படுத்த அமைச்சரவை அனுமதி

எரிவாயுக்கான செலவின் அடிப்படையிலான விலை சூத்திரத்தை நடைமுறைப்படுத்துவதற்கும், ஒவ்வொரு மாதமும் அதனைத் திருத்துவதற்கும் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

அதன்படி, எரிவாயு விநியோகத்தை உறுதி செய்யும் நோக்கில் ஒவ்வொரு மாதமும் 5 ஆம் திகதி உள்நாட்டு எரிவாயு விலைகள் திருத்தப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம், இல-551A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 09.08.2022இல் வெளியிடப்பெற்றது.